
# திருவள்ளுவர்

519



ஆசிரியர் நூற்பதிப்புக் கழகம்
சென்னை

# திருவள்ளுவர்

ஆசிரியர் :
ந. சி. கந்தையா பிள்ளை

பதிப்பாளர் :
ஆசிரியர் நூற்பதிப்புக் கழகம்
பவழக்காரத் தெரு :: சென்னை
பதிப்புரிமை] 1948 [விலை அணா 8

# முன்னுரை

திருவள்ளுவருடைய வரலாறு சாணை பிடியாத இரத்தினக் கற்போல விளக்கமின்றிக் கிடக்கின்றது. அவர் வரலாறு உள்ளவாறு நம் முன்னோரால் காப்பாற்றி வைக்கப்படவில்லை. திருவள்ளுவரின் வரலாற்றை மறந்து போன பிற்கால மக்கள் அவரின் பெருமையைப் புலப்படுத்தவேண்டித் தத்தம் புத்திக்கு ஏற்றனபோல் அவ்வக் காலத்தில் புலப்பட்ட சிலவற்றை எழுதிவைப்பாராயினர். ஆராய்ச்சி அறிவு தலையெடாத ஒரு காலத்தில் அவை உண்மை வரலாறுகளே எனப் பலராலும் கொள்ளப்படலாயின. ஆராய்ச்சிக் கண்கொண்டு நோக்குமிடத்து அவைகளிற் பெரும்பாலன கற்பனைக் கதைகளே யெனத் தெற்றெனப் புலப்படுகின்றன. ஆராய்ச்சிப்புலமை சான்ற பற்பலர் திருவள்ளுவர் வரலாற்றினை ஆராய்ந்து சிற்சில குறிப்புக்களை ஆங்காங்கு வெளியிட்டுள்ளார்கள். அவைகளுட் பெரும்பாலன ஆராய்ச்சியாளர்க்கும் பிற கல்வியாளர்க்கும் எளிதிற் கிடைக்கக்கூடாதவை. நமக்குக் கிடைத்த ஆராய்ச்சிக் குறிப்புக்களோடு நமது பகுத்தறிவையும் பயன்படுத்தி இச்சிறிய நூலை எழுதியுள்ளோம். பகுத்தறிவுக்குப் பொருந்தாதவை எக்காலத்தும் பொருந்தாதனவே.

“அவனே புலவ னவனே கவிஞ
னவனே தமிழை யறிவோன்-சிவனறிய
வள்ளுவ தேவன் வசனத்தை மெய்யாக
வுள்ளுவ தேவ னுளன்”

—பழையபாடல்

சென்னை
11-1-’1948

ந. சி. க.

# பொருள் அடக்கம்


| எண் | | பக்கம் |
|---|---|---|
| 1. | தோற்றுவாய் .... | 1 |
| 2. | திருவள்ளுவரைப்பற்றிப் பழங்கதை வடிவில் வழங்கும் வரலாறு ..... | 4 |
| 3. | ஆராய்ச்சி .... | 8 |
| 4. | வள்ளுவர் வரலாற்றுக்கு ஆதாரங்கள் .... | 9 |
| 5. | குலம் .... | 11 |
| 6. | சமயம் .... | 15 |
| 7. | காலம் .... | 20 |
| 8. | பிறப்பிடம் .... | 23 |
| 9. | திருக்குறள் .... | 24 |
| 10. | திருவள்ளுவ மாலை .... | 31 |
| 11. | பரிமேலழகர் .... | 38 |
| 12. | முப்பாலாக வள்ளுவர் நூல் செய்தற்குரிய காரணம் .... | 42 |
| 13. | திருக்குறள் வடமொழி நூல்களைத் தழுவிச் செய்யப்பட்டதென்னும் மயக்கம் .... | 44 |
| 14. | ஞான வெட்டியான் .... | 45 |
| 15. | பாயிரம் .... | 47 |

# திருவள்ளுவர்

## தோற்றுவாய்

“வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து
வான்புகழ் கொண்ட தமிழ்நாடு” —பாரதியார்.

“இந்திய சனங்களில் தமிழரே முற்பட்டவர்
அவரை அங்ஙனம் செய்வித்தது குறளும் நாலடியுமே”
—டாக்டர் போப்.

தமிழ் மாது உச்சியில் அணியும் சூடாமணி போன்றது திருக்குறள் என்னும் நூல். திருக்குறளால் தமிழ் பெருமை அடைகின்றதெனக் கூறலாம். திருக்குறள் 1,800 ஆண்டுகளின் முன்னரேயே பெரும்புகழ் பெற்று விளங்கிற்று. இதனைச் சீத்தலைச் சாத்தனார் தாம் செய்த மணிமேகலை என்னும் செந்தமிழ் நூலில் அவரைப் “பொய்யில் புலவன்”[1] எனக் குறிப்பிட்டுள்ளமையால் நன்கு புலனாகின்றது. திருவள்ளுவர் பொய்யில் புலவன் எனப் போற்றப்பட்டாராதல் போலவே அவர்

1. தெய்வந் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள்
பொய்யெனப் பெய்யும் பெருமழை யென்றவப்
பொய்யில் புலவன் பொருளுரை கேளாய்
—மணிமேகலை.

நூலும் [2] அறநூலெனக் கொண்டாடப்படுவதா யிற்று. சங்ககாலப் புலவர்கள் முதல் பிற்காலப் புலவர்கள், இக்காலப் புலவர்கள் வரையில் எல்லோ ரும் அவர் திருமொழிகளைப் பொன்னெனப் போற் றித் தத்தம் பாடல்களில் அவற்றை எடுத்து ஆண் டுள்ளார்கள். அன்று முதல் இன்று வரையும் திருக்குறளுக்கு ஒத்தவும் மிக்கவும் நூல்கள் எவை யும் தோன்றவில்லையெனில் திருக்குறளின் உயர் வையும் அதனைச் செய்த ஆசிரியரின் பெருமை யையும் அளவிட்டுக் கூறுதலமையுமோ! திருக் குறள் என்னும் ஒப்புயர்வற்ற நூலைச் செய்த புலவ ரின் வரலாறு நன்கு அறியப்படாது இருந்து வரு கின்றது. “சமயக் கணக்கர் மதிவழி கூறாது—உல கியல் கூறிப் பொருளிதுவென்ற”[3] திருவள்ளுவ ரைச் சைனர், புத்தர், சைவர், வைணவர், கிறித்து வர் முதலிய மதத்தினர் தத்தம் மதத்துக்குரியவர் எனக் கூறுவர். இக்கருத்துக்களை நுழைக்கவும், திருவள்ளுவர் புகழைப் பரப்பவும் விழைந்த மக்கள் காலந்தோறும் பற்பல கற்பனைக் கதைகளைப் புனைந்து கட்டினர். சிறு கல்லைச்சுற்றித் திரண்ட நீர்ப்பாசிபோல இவை எல்லாம் திரண்டு வள்ளு வரின் வரலாற்றை ஊடுருவிப்பார்க்க முடியா வகை மறைத்து நிற்கின்றன.

---

2. நிலம் புடைபெயர்வ தாயினு மொருவன்
செய்தி கொன்றோர்க் குய்தி யில்லென
அறம் பாடிற் றன்றே ஆயிழைகணவ —புறம்-34

3. கல்லாடம்.

முற்கால மக்கள் வரலாறு எழுதும்வகை ஒரு முறையாக விருந்தது. அவர்கள் வரலாறு எழுதுமிடத்து அதன் உண்மை இயல்புகளிலும் பார்க்க, அதனை எவ்வாறு சொன்னல் மக்களுக்கு இன்பம் அளிக்கும் என்பதையே குறிக்கோளாகக் கொண்டிருந்தார்கள். முற்காலக் கற்சிற்பி ஒருவன் கல்லில் ஒரு சிங்கத்தை வெட்ட விரும்பினல் உண்மைச் சிங்கத்துக்குக் காணப்படாத அலங்காரத்தைத் தான் வெட்டும் சிற்பத்துக்கு அமைத்தான். இவ்வகைச் சிற்பங்களை நாம் இன்று பழைய கோயிற் கட்டடங்களிற் காணலாம். இயல்புக்கு மாறுபட்ட அலங்காரங்களோடு காணப்படினும் நோக்குவார்க்கு அச்சிற்பங்கள் சிங்கமே எனத் தெற்றெனத் தோன்ற நிற்கும். இவ்வகை மனப்பான்மையோடு எழுதவும் சொல்லவும் பட்டுவந்தன, ஒருவனவே இன்று பழங்கதைகள் (myths) எனப்படுகின்றன. புராணக் கதைகள் பெரும்பாலும் இவ்வகையினவே. புராணப் போக்காகக் காணப்படும் பழங்கதைகளுள் சில உண்மைகள் பொதிந்துள்ளன. அவற்றை ஏற்ற பெற்றி ஆராய்ந்தறிதல் அறிவுடையோர் கடனகும். இன்று திருவள்ளுவரைப்பற்றி வழங்கும் பழங்கதைகள் பெரும்பாலும் புனைந்து கட்டப்பட்டனவே என்பது சிறுவரும் எளிதில் அறியக்கிடக்கின்றது. ஆதலின், இன்று வழங்கும் வரலாறுகளில் கொள்ளத்தக்கன யாவை தள்ளத்தக்கன யாவை என முதற்கண் ஆராய்ந்து பின்பு பிறவற்றைக் கூறுவோம்.

## திருவள்ளுவரைப்பற்றிப் பழங்கதை வடிவில் வழங்கும் வரலாறு

அண்மையில் விளங்கிய முருகதாச சுவாமிகள் என்பார் புலவர் புராணம் என்னும் நூல் ஒன்று இயற்றியுள்ளார். அவர் தமிழ் நாட்டில் செவி வழக்கில் வழங்கும் திருவள்ளுவரைப்பற்றிய பழங் கதைகளை எல்லாம் திரட்டித் தமது நூலில் கூறி யுள்ளார். அவர் கூறியுள்ளவற்றின் சுருக்கத்தை இங்குத் தருகின்றோம்.

பகவன் என்னும் பிராமணருக்கும் ஆதி என் னும் புலைச்சிக்கும் பிறந்த எழுவருள் திருவள்ளுவர் பிந்தியவர். ஈன்ற தாய் விட்டுச்சென்றதும் மயிலை (மயிலாப்பூர்) யிலுள்ள வேளாளன் ஒருவன் இவரை எடுத்து வளர்த்தான். இவர், பருவமடைந்தபோது வாசுகி என்னும் பெண்ணை மணந்து ஆடை நெய்து வாழ்ந்தார். இவர் பல நூல்களைக் கற்றுத் திருக் குறள் என்னும் நீதி நூலைச்செய்தார்.

அக்காலத்தில் பாண்டி நாட்டில் சங்கப்புலவர் கள் செருக்குற்று மற்றைய புலவர்களை மதியாது அவர்க்குப் பல இன்னல்களை விளைத்து வந்தனர். இச்சங்கத்தை அழிக்கத் திருவுள்ளங்கொண்ட திரு வள்ளுவர் தனது திருக்குறள் ஏட்டைக் கையிற் கொண்டு மயிலையைவிட்டு மதுரையை நோக்கி நடக்கலானார். வழியில் மழை பொழிந்தது. ஆல மரம் ஒன்றின்கீழ் அவர் ஒதுங்கி நின்றார். மற் றொரு புறத்தில் புளிய மரத்தின் கீழ் நின்ற இடைக்

காடர் என்னும் புலவர் வள்ளுவரை நோக்கி "புத்தகத்துப்பேயா சிற்றிலையின் கீழ் வாடா" என்று கூவி அழைத்தார். வள்ளுவரும் அவர் அழைத்ததை அறிந்து அவ்விடஞ் சென்றார். மழை சிறிது பெய்து ஓய்ந்து போனதும் இடைக்காடர் வள்ளுவரைப் பார்த்து "உன் கையிலுள்ள நூல் கூறும் பொருள் யாது சொல்" எனக்கேட்டார். அதில் யாவும் சொல்லப்பட்டுள்ளன என்று வள்ளுவர் விடை பகர்ந்தார்.

இடைக்காடர் தான் கையில் வைத்திருந்த ஆட்டுக்கு இலை பறிக்கும் வளைவு தடியைக்காட்டி "இதற்கும் பாடல் செய்துள்ளாயோ?" எனலும், இமைகொட்டு முன்னமே "உரனென்னும் தோட்டி யான்" என்று தொடங்கும் குறளை எடுத்து வள்ளுவர் சொன்னார். பின்பு இருவரும் அளவளாவி நட்புக்கொண்டு மதுரையை நோக்கிச் சென்றனர். வழியில் இவர்களை எதிர்ப்பட்ட ஔவையாரும் உடன் செல்வாராயினர். மதுரையை அடைந்து இவர்கள் சங்கப்புலவர் முன் செல்லுதலும் அவர்கள் அடுக்கடுக்காகக் கேட்ட பல கேள்விகளுக்கு இவர்கள் மூவரும் மிடுக்காகத் தக்க விடை அளித்தனர். அக்காலத்தில் பொற்றாமரை வாவியில் சங்கப் பலகை ஒன்று மிதந்துகொண்டிருந்தது. அதன் அளவு ஒரு சாண். புலமை மிக்கவர் எத்தனை பேர் ஏறியிருந்தாலும் அது வளர்ந்து இடங்கொடுக்கும். சங்கப்புலவர் நாற்பத்தொன்பது பேரும் சங்கப் பலகையில் ஏறியிருந்து திருக்குறளை அதன்மீது

வைத்தார்கள். பலகை திருக்குறளை மாத்திரம் ஏற்றுச்சங்கப் புலவர்களை வாவியில் தள்ளிற்று. நக்கீரர் முதலிய புலவர்கள் வாவியில் மூழ்கி நாணத்தோடு கரையை அடைந்தனர். சங்கப் புலவர்கள் ஒவ்வொருவரும் திருவள்ளுவரைப் புகழ்ந்து தனித் தனி ஒவ்வொரு வெண்பாப் பாடிவிட்டுப் பிரிந்து தமது தமது இடஞ்சென்று தத்தம் தொழில்களைச் செய்து வாழ்ந்தனர். சங்கம் குலைந்தது; பொற்றாமரை வாவியில் சங்கப்பலகை தோன்றாமல் மறைந்தது.

வள்ளுவர் தனது ஒப்புயர்வில்லாத நூலினால் மிக்க புகழ் அடைந்து மனை வாழ்க்கை இனிது நடத்திவந்தார். ஒருநாள் வள்ளுவர் பழையது உண்டுகொண்டிருந்தார். அப்பொழுது அவர் தனது மனைவியை அழைத்துச் சோறு சுடுகின்றது எனக் கூறினார். மனைவியாரும் உடனே விசிறி கொண்டு வீசிச் சூடு ஆற்றினார். உணவில் ஆவி உண்டாயிற்று. இன்னொரு நாள் வாசுகியார் குடங் கொண்டு தண்ணீர் மொண்டு கொண்டிருந்தார். வள்ளுவர் அவரை அழைத்தார். வாசுகியார் தண்ணீரையும் கயிற்றையும் அவ்வளவில் விட்டுவிட்டுச் சென்றார். குடமும் கயிறும் கிணற்றின் பாதி வழியில் அப்படியே நின்றன.

ஏலேலசிங்கன் என்னும் செட்டி ஒருவர் இவருக்கு மாணக்கராக விருந்தார். திருவள்ளுவர் அவனுடைய பக்குவத்தைச் சோதிக்கும்பொருட்டு அவனை மரத்தில் ஏறும்படி செய்து கையை விடும்

படி சொன்னார். அவனும் "குருபரன் துணை" என்று கையை விட்டான். அவனும் வாசுகியின் தண்ணீர்க்குடம் நின்றதுபோல அந்தரத்தில் நின்றான். பின்பு ஒருநாள் வள்ளுவர் அவனுடைய செல்வத்தையெல்லாம் பொன்னாகத் திரட்டிப் பாளஞ்செய்து கடலிற் போடும்படி சொன்னார். அவனும் அப்படியே பாளத்தில் தனது பெயரைப் பொறித்துக் கடலில் விட்டான். அதனை ஒரு மீன் விழுங்கிற்று. அம்மீனைப் பிடித்த செம்படவர் அதன் வயிற்றிற் பாசியோடிருந்த பொற்பாளத்தைக் கல் என்று நினைத்து ஏலேலசிங்கனின் வாசலிற் போட்டார்கள். ஏலேலசிங்கன் இதனை வள்ளுவரிடங் கூறுதலும் அவர் அறவினையால் வந்த பொருளை அகற்றினும் அகலாதென மொழிந்தார். இதனை அறிந்த உலகத்தார், "ஏலேல சிங்கத்தின் பொருள் தானேபோய்த் தானே வரும்" எனக் கூறுவாராயினர்.

வள்ளுவரின் மனைவி உயிர்விடுங் காலத்து ஆவலோடு வள்ளுவர் முகத்தை நோக்கினார். அது கண்ட வள்ளுவர் அருகே சென்று காரணம் வினவுதலும் வாசுகியார் "தங்கள் எண்ணப்படி உண்ணும்போது ஒரு கிண்ணத்தில் நீரும் அதன் பக்கத்தே ஊசியும் வைப்பது வழக்கம். அவ்வாறு அவைகளை வைத்ததற்குக் காரணம் விளங்கவில்லை" எனச்சொன்னார். "சோறு நிலத்தில் விழுந்தால் அதனை ஊசியால் கோத்தெடுத்து நீரில் அலம்பியுண்பதற்கு அவ்வாறு அவைகளை வைக்

கும்படி செய்தேன். அவ்வாறு செய்ய ஒரு முறையும் நேரவில்லை" என வள்ளுவர் கூறினர். வாசுகியார் இவ்வுலக வாழ்வை ஒருவினர். அவரது பிரிவை ஆற்றாத வள்ளுவர் மிகவருந்தி,

"அடிசிற் கினியாளே யன்புடை யாளே
படிசொற் றவறாத பாவாய்—அடிவருடிப்
பின்றூங்கி முன்னெழுந்த பேதையே போதியே
என்றூங்கு மென்கண் ணிரா"

என்னும் பாடலைப் பாடினர்.

அவர் ஏலேலசிங்கரை அழைத்து தானிறக்க நேர்ந்தால் இரண்டு காலிலும் வைக்கோற் புரியைக் கட்டி இழுத்து ஊர்ப்புறத்தில் இடும்படி கூறினர். ஒருநாள் வள்ளுவர் பலருமறிய மரண மடைந்தார். ஏலேலசிங்கர் வருந்தி அழுது பிணத்தைக் கழுவி முழுக்காட்டி தேரில் இடப் போகும்போது அது விழித்துச் "சொன்னபடி செய்யாது இவ்வாறு செய்தாய்" எனவும் அவர் முன் சொல்லியபடி செய்தார். அவ்வுடலை உண்ட காக்கை முதலியன பொன்னிற மடைந்தன.

## ஆராய்ச்சி

பழங்கதை வடிவில் வழங்கும் இவ்வரலாற்றை நோக்கும்போது இதனகத்தே கற்பனைகள் பல உள்ளன வென்பதை எவரும் தெள்ளிதிலறிவர். இக்கதையின் அகத்தே சிற்சில உண்மைகள் உள்ளன என்பதையும் நாம் உய்த்தறிதல்கூடும்.

(1) திருவள்ளுவர் செய்த திருக்குறள் கடைச் சங்கத்தின் இறுதியில் அரங்கேற்றப்பட்டது. (2) திருவள்ளுவர் இல்லறத்தை மேற்கொண்டு ஒழுகியது. (3) அவர் ஏலேலசிங்கன் என்னும் பிரபு ஒருவரின் ஆதரவுபெற்று இருந்தது போன்றவை உண்மை வரலாறுகளாகுமெனத் துணியலாம்.

## வள்ளுவர் வரலாற்றுக்கு ஆதாரங்கள்

வள்ளுவரின் வரலாற்றைக் குறித்த பழைய ஆதாரங்கள் எவையும் காணப்படவில்லை. இற்றைக்கு ஏறத்தாழ நானூறு ஆண்டுகளின் முன் செய்யப்பட்டதெனக் கருதப்படும் ஞானமிர்தத்தில்,

...........“...............யாளி
கூவற் றாண்டு மாதப் புலைச்சி
காதற் சரணி யாகி மேதினி
யின்னிசை யெழுவர்ப் பயந்தோ னீண்டே ”

என கூறப்பட்டுள்ளது.

வள்ளுவரின் தந்தை யாளிதத்தர் என்னும் அந்தணரென்றும் தாய் புலைச்சி யென்றும் ஞானமிர்தத்தில் கூறப்படுதல் காண்க. ஞானமிர்தத்துக்கு அடுத்தபடியிலுள்ளது கபிலரகவல். கபிலரகவல் பழைய உரையாசிரியர்கள் எவராலும் எடுத்தாளப்படவில்லை. இதன் நடைக்கும் சங்கச் செய்யுட்களின் நடைக்கும் பெரிதும் வேறுபாடு உண்டு. இந்நூல் விசாகப்பெருமாள் ஐயர் காலத்திற் செய்யப்பட்டதெனக் கூறுவாருமுளர். கபிலரகவல் செய்யப்படுகின்ற காலத்தில் திருவள்ளு

வரைப்பற்றிய கதைகள் வளர்ச்சி யடைந்திருந்தன வென்று தெரிகின்றது. கபிலரகவலில் திருவள்ளுவரின் தந்தை பகவனென்றும் தாய் ஆதி என்றும் கூறப்பட்டுள்ளனர்[1]. ஞானமிர்தத்தில் திருவள்ளுவரின் தந்தை யாளிதத்தரெனவும் கபிலரகவலில் பகவன் எனவும் கூறப்படுதல் கருத்திற் கொள்ளத் தக்கன.

---

1 "அருந்தவ மாமுனி யாம்பக வற்குக்
கருவூர்ப் பெரும் பதிக் கட்பெரும் புலைச்சி
ஆதி வயிற்றினி லவ தரித்த
கான்முளை யாகிய கபிலனும் யானே
என்னுடன் பிறந்தவ ரெத்தனை பேரெனி
லாண்பான் மூவர் பெண்பா லல்வர்
யாம்வளர் திறஞ் சிறிதியம்புவல் கேண்மின்
ஊற்றுக் காடெனு மூர்தனிற் றங்கியே
வண்ணா ரகத்தில் உப்பை வளர்ந்தனள்;
காவிரிப்பூம் பட்டினத்திற் கள்விளைஞர் சேரியிற்
சான்றா ரகத்தினில் உருவை வளர்ந்தனள்;
நரம்புக் கருவியோர் நண்ணிடு சேரியிற்
பாண ரகத்தில் ஔவை வளர்ந்தனள்;
குறவர் கோமான் கொய்தினைப் புனஞ்சூழ்
வனமலைச் சாரலில் வள்ளி வளர்ந்தனள்;
தொண்டைமண் டலத்தில் வண்டமிழ் மயிலைப்
பறைய ரிடத்தில் வள்ளுவர் வளர்ந்தனர்;
அரும்பார் சோலை சுரும்பார் வஞ்சி
யதிக னில்லிடை அதிகமான் வளர்ந்தனன்;
பாரூர் நீர்நாட் டாரூர் தன்னி
லந்தணர் வளர்க்க யானும் வளர்ந்தேன்"
(கபிலரகவல்)

திருவள்ளுவர் தமிழ் நாட்டில் விளங்கிய பேரறிஞர் ஒருவர் எனத்தெரிகின்றது. அவர் குலம் பிறப்பு வளர்ப்பு ஆகியவைகளைப்பற்றிய செய்திகளெல்லாம் காலம் என்னும் இருளில் கரந்து கிடக்கின்றன. அவைகளைக் கற்பனைகளாலும் ஊகைகளாலும் அறிதல் இயலா. ஆகவே அவருடைய பிறப்பு அறியாதவைகளுள் ஒன்று எனக்கொள்வதே ஏற்றதாகும்.

## குலம்

திருக்குறளில் "அகர முதல் எழுத்தெல்லாம் ஆதிபகவன் முதற்றே உலகு "என வரும் முதற் பாடலில் ஆதிபகவன் என்னும் சொல் கடவுளைக் குறிக்க வழங்கப்பட்டுள்ளது. இப்பெயரை ஆதாரமாகக்கொண்டு கற்பனையாளர் சிலர் திருவள்ளுவர் தனது தாய் தந்தையரின் பெயரை முதற் குறளில் குறிப்பிட்டுள்ளார் எனக்கருதி, ஆதி என்பது திருவள்ளுவரின் தாயின் பெயரென்றும் பகவன் என்பது தந்தையின் பெயரென்றும் கூறுவாராயினர். இவர் வள்ளுவர் என்னும் புலைக்குலத்தினர் எனக் கொண்டதற்குரிய காரணம் வள்ளுவர் என்னும் பெயர் பிற்காலத்தில் புலைக்குலத்தினர் பதினெண் பிரிவினருளொருவரும், புலைக்குலத்தினரின் புரோகிதருமாகிய ஒரு கூட்டத்தினருக்கும் வழங்கினமை பற்றியாகும். வள்ளுவர் என்பதற்கு வளமையர் எனப் பொருள்கொள்வாருமுண்டு.

"தென்னுசொற் புலமைவாய்ந்து சேலைசெய் திருந்தவாற்றால்
வள்ளுவ ரென்றார்பல்லோர் வளமையோ னெனவோராரே.
—புலவர் புராணம்

சங்ககாலத்தில் வள்ளுவன் என்னும் பெயர் புலைக் குலத்தினரைக் குறிக்க வழங்கவில்லை யென்பதைப் பண்டை இலக்கியங்களால் நன்கு அறிகின்றோம். அப்பெயர் அரசனின் கருமத்தலைவருள் (Officials) ஒருவனைக் குறிக்க வழங்கிய உத்தியோகப் பெயராகும்.

" வள்ளுவன் சாக்கை யெனும் பெயர் மன்னற்
குள்படு கருமத் தலைவர்க் கொன்றும்"
—திவாகரம்

சங்ககாலத்துக்குப் பிற்பட்ட பெருங்கதை, சிந்தாமணி முதலிய நூல்களில் வள்ளுவ உத்தியோகத்தனின் கடமைகளில் ஒன்று, யானையின் பிடர்மீது ஏறியிருந்து அரச விழாக்களை நகரமாந்தர்க் கறிவிப்பதெனத் தெரிகின்றது. பிற்காலத்திலேயே இப்பெயர் பறையருக்குப் புரோகிதரும் நிமித்திகருமாகிய ஒரு புலைவகுப்பினரின் பெயராக வழங்குவதாயிற்று.

" அப்பெயரால் நாம் கொள்ளற்குரியது அவ்வாசிரியர் அவர்காலத் தமிழரசன் ஒருவன்பால் 'உள்படு கருமத்தலைவராக' அமர்ந்தவராக வேண்டுமென்பதே. பிரித்தானியாவில் பேரமைச்சராயிருந்த பேகன் (Bacon) பெருநூல் எழுதிய பின்னர் அவன் அமைச்சனாய் இருந்த வரலாறு முழுதும் மறந்து அறிஞர் கூட்டத்தில் வைத்து

எண்ணப்படுவதனையே பெரும்பாலார் அறிவர். சாணக்கியரை அவர் பெயரால் நின்று நிலவும் நூலாசிரியரென அனைவரும், சந்திரகுப்தனின் மந்திரி என்றதை வெகு சிலருமே கூறக் காண லாம். இம்முறையில் நம் முதல் பாவலரும் அரசன் கருமத்தலைமை வகுத்து வள்ளுவப்பதவியும் பட்ட மும் பெற்ற உபசாரப்பெயரால் அழைக்கப்பட் டிருந்தவர் பின் தம் இறவாக் குறள்நூலை இயற் றிப் புகழ்ச்சியடைந்ததனால், கேவலம் உத்தி யோகப்பதவிப் பெயரைப் பாராட்டி அவருக்குப் பெருமை கூறக் காரணமில்லாது அப்பெயர்ப் பொருளை மறந்த மக்கள் நெடு வழக்கால், வள்ளு வப்பெயர் அவர்க்கு மட்டும் நின்றுவர வாய்ந்தது போலும்.

"மேலும் வள்ளுவப் பெயர் சங்ககாலத் தமி ழகத்திற் பறையரினொரு வகுப்புக்கும் சாதிப் பெயராகாமல் தகவுடை முடியுடை மன்னர் மகட் கொடைக்குரிய வேளிர்-குறுநில வேந்தரிடை வழங்கிவந்த செய்தியு மீண்டு சிந்திக்கத்தக்கது. சங்க காலத்துக்கு முந்திய புலவர் முதுசுவைப்பாக் களையும் கொண்டுள்ளதெனக் கருதப்படும் புறப் பாட்டில் மருதனிளநாகனார், கருவூர்க்கதப் பிள்ளை ஒரு சிறைப்பெரியனார் என்னும் பண்டைப் பாவா ணர் பாடிய நாஞ்சிற்குரிசிலின் பெயர் வள்ளுவன் எனச் சுட்டப்படுகின்றது. அஃது அவன் இயற் பெயராதல் ஒன்று, அன்றேல் அவன் சேரன் மாட்டு அன்புடையனாய் அவனுக்குப் படைத்துணை

நின்றதாயறிகின்றோ மாகையால் அக்குடச் சேர வரசன் கொற்றத்து அருங்கடம் பூண்டு உள்படு கருமத் தலைவனயிருந்த பதவியாலெய்திய பட்டப் பெயராதல் ஒன்றும். எதுவேயாயினும் வேளாண் மரபிற் குறுநில வேந்தனுக்கு வள்ளுவனென்னும் பெயர் புறப்பாட்டில் வழங்குவதாலும், சங்க நூல்களில் அது புலைக்குலச் சாதிப்பெயராக யாண்டும் பயிலாமையாலும், வள்ளுவர் பெயர் 'மன்னர் உள்படு கருமத் தலைவருக்கு ஒன்று' மென்றே சேந்தனார் திவாகரத்திற் செப்புவதாலும் அப்பெயருடைமைகொண்டு அறப்பழங்காலக் குறளான நூலுடையாரைப் பறைக்குலத் தவரெனக் கருதல் முறையின்றும்"[1]

திருக்குறட் பொருட்பாலை நோக்குமிடத்து அரசியல் வட்டாரங்களில் சிறந்த அனுபவம் பெறாத ஒருவர் திருக்குறளைச் செய்திருக்க முடியாதெனத் தெற்றெனப் புலப்படும். அரசியல் உத்தியோகங்களுக்கு குடிப்பிறந்தாரையே தெரிதல் வழக்காறென்பது திருக்குறளாலேயே அறியவருகின்றது. வள்ளுவன் என்பது அரசாங்கரும் தலைமை உத்தியோகங்களின் ஒன்றாயின் வள்ளுவர் உயர் குடிப்பிறந்தார் ஒருவரேயாவர்[2]. இவர்

---

1. தமிழ்ப் புலவர்-உயர்திரு. சோமசுந்தர பாரதியார்.

2. "வள்ளுவனென்பானோர் பேதை யவன்வாய்ச் சொற் கொள்ளாரதிவுடையார்" என வரும் திருவள்ளுவமாலை அடிகள், குறள் நூல் ஆசிரியரை வள்ளுவர் குலத்த

பெயர் சிறப்பாக உத்தியோகப் பெயரால் அறியப் பட்டமையின் அவர் இயற்பெயர் மறந்துபோகப் பட்டது.

## சமயம்

[2]"அருகக் கடவுட்குரிய 'மலர்மிசை யேகினான்' 'அறவாழி அந்தணன்' முதலிய பெயர்கள் காணப் படுதலாலும் கடவுள் வாழ்த்து முதலிய நான்கு அதிகாரங்களும் அருக சரண முதலிய நான்கு சரணங்களையுங் குறிக்க எழுந்தனபோல் நிற்றலா லும், அருகரியற்றிய நூல்களுள் திருக்குறளினின் றும் மேற்கோள்கள் எடுத்து வழங்கப்பட்டமையா லும் திருக்குறளாசிரியர் சைனரென்றுரைப்பர் சிலர். 'அடியளந்தான் என்றும்' 'செங்கண்மால்' என்றும் சிலவிடங்களிற் குறித்தலின் அவர்வைண வரென்பது சிலர் கொள்கை. உரையாசிரியர் பரி மேலழகரும் முக்கியமான சில நுட்பங்களை விளக் கவந்த விடங்களில் வைணவக் கிரந்தங்களிலிருந்து மேற்கோள் காட்டித் திருவள்ளுவர் வைணவ ரென்று தாம் கருதுவார்போல் எழுதிப் போயினர்.

வன் என ஒருவன் கூறினால் அவன் பேதை யாவானென் றும் அவனுடைய சொல்லை அறிவுடைய மக்கள் ஏற்றுக் கொள்ளார் என்றும் விள்ளுகின்றன. இதனால் வள்ளுவ மாலை செய்யபபடுகின்ற காலத்திலே வள்ளுவர் என்னும் பெயர் புலைக்குலத்தினருக்குப் பெயராக வழங்குவதாயிற் றென்றும், வள்ளுவரை அக்குலத்தவராகக் கூறுதல் பொருந்ாதென்றும் கொள்ளும் கருத்துக்கள் இருந்தமை புலனாகின்றது.

2. எஸ். அநவரதவிநாயகம் பிள்ளை.

"சைவப் பெரியோர் இயற்றிய பிரபந்தங்களுள்ளும் சாத்திரங்களுள்ளும் திருக்குறள் மேற்கோள்கள் மிகுதியாகக் காணப்படுகின்றன. இவற்றை நன்ருக ஆலோசிக்கின், கல்லாடர் திருவள்ளுவ மாலையுட் கூறிய,

'ஒன்றே பொருளெனின் வேறென்ப வேறெனி
னன்றென்ப வாறு சமயத்தார்—நன்றென
வெப்பா லவரு மியைபவே வள்ளுவனுர்
முப்பான் மொழிந்த மொழி'

என்னும் கருத்தே வலிபெறுவதாம். திருவள்ளுவர் தம் மதம் இன்னதென்று மறந்துஞ் சுட்டியவரல்லர். எல்லாச் சமயத்தாரும் கொண்டாடத்தக்க தருமநூலைச் செய்வதே அவர் கருத்து. அவர் சைவரோ சைனரோ எம்மாற் சொல்லவியலாது. குறளால் அவர் இன்ன மதத்தினரென்று துணிந்துரைக்கப் புகுதல் தருக்கவழுவுட்படும். அருக சரண முதலியவற்றைக் குறிக்கவேண்டுமாயின் அவ்வாறே நேரே குறித்து நூல் செய்திருக்கலாமே! வைணவராயின் கடவுள் வாழ்த்துள் திருமால் பெயர்களை வழங்கியிருக்கலாமே!

"இதனுற்றீர்வது திருவள்ளுவர் நீதி நூலொன்றைச் செய்ய வந்தவரேயன்றி மத நூலைச் செய்ய வந்தவரல்லர். நீதி நூலும் எல்லாச் சாதியினர்க்கும் எல்லாச் சமயத்தினருக்கும் பொதுவாயிருத்தலை வேண்டினவராதலின், தம்மதமின்னதென்று குறியாது பொதுவாகக் கடவுள் வாழ்த்து முதலியன கூறினர்.

"இனி இக்காலத்துக் காணலாகும் ஆன்றோர் சிலரைப்போல திருவள்ளுவரும் மதங்களெல்லாவற்றுள்ளும் சிறந்த பொருள்களைத் தெரிந்தெடுத்துத் தம்மறிவிற்குச் சம்மதமாகிய மதமொன்றுக்கி வந்தவரெனினும் பொருந்தும்."

தமிழரிடையே உலகம், உயிர், கடவுள் என்னும் முப்பொருள்களைப் பற்றிய ஆராய்ச்சி மிகப் பழங்காலத்திலேயே தோன்றி வளர்ச்சி யடைந்திருந்தது. உயிர், மெய், உயிர்மெய், வினை, வேற்றுமை போன்ற இலக்கணத்தில் ஆளப்படும் பழந்தமிழ்ச்சொற்களே இதற்கு உறுசான்றுகளாவன. இவைகளைப்பற்றிய உண்மைகள் உபநிடத நூல்களிற் கூறப்படுகின்றன. சித்தாந்த சாத்திரங்களிற் கூறப்படும் முப்பொருள் உண்மைகளும் தமிழரின் பழைய தத்துவக் கொள்கைகளே. வரலாறு தொடங்குவதன் முன்னரே சைவ சித்தாந்த ஞானம் தமிழரிடையே தோன்றி வளர்ச்சி யடைந்திருந்ததெனு டாக்டர் போப் கூறியுள்ளார். உபநிடதங்கள் கூறுகின்ற முப்பொருளுண்மை சாதிமதம் என்னும் பேதமின்றி எல்லா மக்களுக்கும் பொதுவாயுள்ளதென மேல் நாட்டறிஞரும் ஆராய்ந்து கூறியுள்ளார்கள்.[1]

1. The Upanishads are a world scripture, that is to say, a scripture appealing to the lovers of religion and truth in all races and at all times without distinction—Thirteen principal upanishads translated—*Robert Ernest Home.*

Dr. Pope in his short paper on the ethics of *Kural* holds that Thiruvalluvar bases his ethics on the

புத்தம், சைனம், சாங்கியம் முதலிய மதங்களும் பழைய தமிழர் மதத்தினின்றும் பிரிந்த கிளைகளே.[2] வள்ளுவர், வினை, வினைப்பயன், உயிர், உலகம், கடவுள், பிறப்பு, இறப்பு போன்ற கொள்கைகளை ஏற்றுக்கொண்டவரென அவர் நூலினால் தெற்றென விளங்குகின்றது.[3]

> "சமயக் கணக்கர் மதிவழி கூறா
> துலகியல் கூறிப் பொருளி தவென்ற
> வள்ளுவன் றனக்கு வளர்கவிப் புலவர்முன்
> முதற்கவி பாடிய முக்கட் பெருமான்"
>
> — கல்லாடம்-15.

எனவரும் கல்லாட அடிகளால் கல்லாடர் காலத்துத் திருவள்ளுவர் சிவ மதத்தவர் என்னும் நம்பிக்கை இருந்து வந்ததெனத் தெரிகின்றது. கல்லாடரின் காலம் கி. பி. 10-ஆம் நூற்றாண்டு வரையிலாகும்.

> தேவர் குறளுந் திருநான் மறைமுடிவும
> மூவர் தமிழு முனிமொழியும்—கோவை
> திருவா சகமுந் திருமூலர் சொல்லு
> மொருவா சகமென் றுணர்.

---

grand truths of *Thiripadartha*, Pathi, Pasu and Pasa In fact his creed is not a godless creed like that of the Jains or Buddhists. —*Tamilian antiquary Vol. 2, No. 6.*

2. Oldenburgh has indeed fairly worked out both in his earliest volumes of Buddha how the Upanishads prepared the way for Buddhistic thought and derives precision for having attempted a hitherto unattempted work—*Constructive Survey of Upanishadic Philosophy*—P. 4.

3. தமிழர் மதம் உலக மதமென்பதை. (1) தமிழர் சமயம் எது? (2) நமது சமயம். (3)சிவன் என்னும் நூல்களில் விரித்து விளக்கியுள்ளோம், காண்க.

என்னும் ஔவையார் வாக்கினாலும் திருவள்ளுவர் சிவமதத்தைச் சார்ந்தவரெனக் கொள்ளப்பட்டா ரெனவே தெரிகின்றது. இன்னும்,

[1]"வள்ளுவர்நூ லன்பர்திரு வாசகந் தொல்காப்பியமே
தெள்ளுபரி மேலழகர் செய்தவுரை—ஒள்ளிய சீர்த்
தொண்டர் புராணந் தொகைசித்தி யோராறுந்
தண்டமிழின் மேலாந் தரம்"
பல்காற் பழகினுந் தெரியா வுளவேற்
றொல்காப்பியந்திரு வள்ளுவர் கோவையார்
மூன்றினு முழங்கும்........" —இலக்கணக் கொத்து

என வருவனவும் நோக்கத் தக்கன.

திருவள்ளுவர் மைலாப்பூரிலிருந்தவர் என்றும் அவர் சிவமதத்தினர் என்றும் வழங்கிய ஐதீகத்தை ஒட்டி மைலாப்பூரில் அமைக்கப்பட்ட திருவள்ளுவர் கோவிலில் உள்ள திருவள்ளுவர்த் திருவடிவத்துக்குத் திருநீறும் உருத்திராக்கமுந் தரிக்கப்படுகின்றன.

"கச்சிவிட்டலை கடற்றுறை மயிலையிற் கடுக்கெனப் புகுந்தாங்கு
நச்சிவாழொரு சிற்பனால் வள்ளுவ நாயனாருச் செய்து
மெய்ச்சிவன்றரு மாகமவிதிப்படி மேவுமவ்வயின்றாபித்
திச்சியாநனி பூசைசெய்துய்யும்படி யிலிங்க தாரணாக்கினான்"
—புலவர் புராணம்

திருவள்ளுவரின் வடிவமென்று இககாலத்தார் கொள்வது சிற்பி ஒருவன் கற்பித்த கற்பனையே யாகும். சங்ககாலத்தில் துறவிகள் உருத்திராக்கவடம் அணிந்தார்கள் என்று கொள்வதற்கில்லை.

---

1. இப்பாடல் உமாபதி சிவம் செய்ததென வழங்குகின்றது..

இதனை கலித்தொகை திருமுருகாற்றுப்படை முதலிய சங்க நூல்களில் கூறப்பட்டும் துறவிகள் முனிவர்களுக்கு உருத்திராக்க அணி குறிக்கப் படாமை கருத்திற் கொள்ளத்தக்கது. சிற்பியும் தான் வெட்டிய திருவுருவத்துக்கு அதனை அமைத்திலன்; திருநீற்றுப் பூச்சும் வைத்திலன்.

## காலம்

திருவள்ளுவர் கடைச் சங்கத்தின் இறுதி அரசனாகிய உக்கிரப் பெருவழுதி காலத்தவரெனக் கருதப்படுவர். குறளிலிருந்து [1]கலித்தொகை புறநானூறு, நற்றிணை முதலிய நூல்கள் சில அடிகளை எடுத்து ஆண்டுள்ளன. இதனால் திருக்குறள் சங்க காலத்தது என்று நன்கு துணியப்படுகின்றது. உக்கிரப் பெருவழுதியின் காலம் கி. பி. 50 வரை

[1]முந்தையிருந்து நட்டோர் கொடுப்பின்
நஞ்சுமுண்பர் நனிநாகரிகர்—நற்றிணை
பெயக்கண்டு நஞ்சுண் டமைவர் நயத்தக்க
நாகரிகம் வேண்டு பவர்—குறள்

பிறர்நோயுந் தந்நோய்போற் போற்றி அறனறிதல்
சான்றோர்க் கெல்லாங் கடனால்—கலித்தொகை
அறிவினானாகுவ துண்டோ பிறிதி னோய்
தந்நோய்போற் போற்றாக் கடை—குறள்

நெஞ்சறிந்த கொடியவை மறைப்பினும் மறையாவா
நெஞ்சத்திற் குறுகிய கரியில்லை யாகலின்— கலி
தன்னெஞ் சறிவது பொய்யற்க பொய்த்தபின்
தன்னெஞ்சே தன்னைச் சுடும்—குறள்

யிலெனை ஆராய்ச்சி அறிஞர் கூறுவர். மணி மேகலை, சிலப்பதிகாரம் என்னும் நூல்கள் திருக்குறளைக் குறிப்பிடுகின்றன. சிலப்பதிகாரம், மணி மேகலை என்னும் நூல்கள் இலங்கைக் கயவாகுவின் காலத்திற் (கி. பி. 173-195) செய்யப்பட்டன. ஆகவே திருக்குறள் 1,800 ஆண்டுகளுக்கு முற்பட்ட நூல் என்பதில் சிறிதும் ஐயம் இல்லையாகும். மதுரை தீயுண்டதெனச் சிலப்பதிகாரத்திற் சொல்லப்பட்டுள்ள காலம் சோதிடக் குறிப்பின்படி கி. பி. 171 என K. G. சேஷ ஐயரவர்கள் கூறியுள்ளார்கள். திருக்குறளின் காலத்தைக் கி. பி. ஆறும் நூற்றாண்டு எனக் கூறுவாருமுளர். அன்னோர் கூற்றுக்களுக்கு அவர்களின் கற்பனையையன்றி வேறு ஏற்ற சான்றுகள் இலவாம்.

[1]"குறள் அரங்கேற்றப்படும் காலத்தில் மதுரையிலிருந்தவன் உக்கிர பாண்டியன். இவனே கானப்பேர் எயில் எறிந்த வேங்கைமார்பன். இவனது உடன் பிறந்தார்கள் எனக்கூறப்படும் ஒளவை, கபிலர், பரணர் முதலியோர் இப்பாண்டியனையும் அவனுடைய இரண்டு நண்பர்களாகிய சோழன்

---

முற்பகற் செய்தான் பிறன்கேடு தன்கேடு
பிற்பகற் காண்குறூஉம் பெற்றியகாண் நற்பகலே" —சிலப்

பிறர்க்கின்னா முற்பகற் செய்யிற் றமக்கின்னா
பிற்பகற் றாமே வரும். —குறள்-331

1. இது பண்டிதர் சவரிராய பிள்ளை அவர்கள் தமிழர் புராதன கலைஞனில் (Tamilian Antiquaary) வள்ளுவர் காலத்தைப்பற்றி எழுதிய குறிப்பு

பெருநற்கிள்ளி, சேரன் மாவெங்கோவையும் பாடியுள்ளார்கள். பரணர், கபிலர், பெருங்குன்றூர் கிழார் முதலியோர் வையாவிக்கோ பெரும்பேகன் என்னும் வேளிரைப் பாடியுள்ளார்கள். இவனுடைய புதல்வியைச் சேரலாதன் செல்வக்கடுங்கோ மணந்தான். பரணர் இவன்மீது பதிற்றுப்பத்தின் ஏழாம் பத்தைப் பாடினர். இவனுடைய புதல்வனாகிய சேரலாதன் வானவரம்பன், முதலாம் கரிகாலனின் மகளை மணந்தவனுவன். பரணராலும் பெருங்குன்றூர் கிழாராலும் பாடப்பட்டவர் முதலாம் கரிகாலனின் தந்தையாகிய இளஞ்சேட்சென்னி. ஆகவே உக்கிர பாண்டியன் என மறுபெயர் பெற்ற உக்கிரப் பெருவழுதி காலத்துச் சோழ அரசரில் பெருநற்கிள்ளியும் இளஞ்சேட்சென்னியும், சேர அரசரில் மாவெங்கோவும் செல்வக் கடுங்கோவும் வாழ்ந்தார்கள்.

சிலப்பதிகாரத்தால், கி. பி. இரண்டாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் தமிழகத்திலுள்ள மூவரசர் நாடுகளிலும் பாண்டியன் நெடுஞ்செழியன், சோழன் நெடுமுடிக்கிள்ளி, சேரன் செங்குட்டுவன் முதலினோர் ஆட்சி புரிந்தனர் என அறிகின்றோம். இவர்கள் முதலாம் கயவாகுவாகிய இலங்கை அரசன் காலத்தவர்[1] அக்காலத்தில் செங்குட்டு

---

1. கயவாகுவின் காலம் கி. பி. 113-135-க்குப் பதில் கி. பி. 173-195 எனத்துணியப்படுதலின் இவ்வாராய்ச்சியிற் கூறப்படும் காலம் 60 ஆண்டுகள் கீழே செல்லும்.

வனின் புகழ் ஓங்கியிருந்தது. இவன் சேரலாதன் வானவரம்பனின் புதல்வன். அக்காலத்தில் நெடுஞ் செழியன் மதுரையிலிருந்து ஆட்சி புரிந்தான். இவன் ஆரியப்படை தந்த நெடுஞ்செழியன் எனவும் பட்டான். சிலப்பதிகாரத்தில் ஆரியப்படை தந்த நெடுஞ்செழியனைப்பற்றிச் சிறப்பித்துக் கூறுமிடத்து தமிழ்ச் சங்கத்தைப்பற்றி யாதும் கூறப் படவில்லை. அக்காலத்து ஔவையும் கபிலரும் மறைந்து விட்டார்கள். டாக்டர் கிருஷ்ணசாமி ஐயங்கார் உக்கிரப் பெருவழுதி நெடுஞ்செழியன் எனவே தமிழ் 'இலக்கியம் செழிப்புற்றிருந்த காலம்' என்னும் கட்டுரையில் குறிப்பிட்டுள்ளார். இவனே கோவலனைக் கொல்லும்படி கட்டளை யிட்டவன்.

"செங்குட்டுவன் ஐம்பது ஆண்டுகள் ஆட்சி புரிந்தான் என்று சொல்லப்பட்டுள்ளது. இது கி. பி. 95-க்கும், 145-க்கும் இடையில். இவன் முதலாம் கரிகாலனது பேரன் (மகளின் மகன்). கரிகாலனின் காலம் கி. பி. 50 முதல் கி. பி. 90 வரையும். கரிகாலன் தந்தையாகிய இளஞ்சேட் சென்னி காலத்தவனாகிய உக்கிரப் பெருவழுதியின் காலம் கி. பி. 30-க்கும் 50-க்கும் இடையில் என முடிவு செய்யவேண்டும். **இதுவே உக்கிர பாண்டியன் காலத்து நடைபெற்ற தமிழ் சங்கத்தில் அரங்கேற்றப்பட்ட திருக்குறளின் காலமுமாகும்.** உக்கிர பாண்டியனும், நெடுஞ்செழியனும் ஒருவராகக் கொள்ளப்பட

1. Augustian age of Tamil Literature.

வேண்டும் அல்லது அவன் நெடுஞ்செழியனுக்குப் பின் ஆட்சிக்கு வந்தவனாதல்வேண்டும்.

## பிறப்பிடம்

திருவள்ளுவரின் பிறப்பு வளர்ப்பு இயற்பெயர் முதலியன அறியப்படாதிருத்தல் போலவே அவருடைய பிறப்பிடமும் அறியப்படாதவைகளுள் ஒன்றாகும். கி. பி. ஒன்பது அல்லது பத்தாம் நூற்றாண்டளவிற் செய்யப்பட்டதெனக் கொள்ளப்படும் திருவள்ளுவ மாலைப் பாடலில் ஒன்று[1] திருவள்ளுவரின் பிறப்பிடம் மதுரை எனக் கூறுகின்றது. மைலாப்பூரில் திருவள்ளுவர் கோயில் அமைக்கப்பட்டிருந்தமை பற்றி அவர் மைலாப்பூரைப் பிறப்பிடமாக உடையவர் எனக் கொள்ளப்படுகின்றாரோ? அவர் மைலாப்பூரைப் பிறப்பிடமாகக் கொண்டவரென்னும் ஐதீகம் இருந்தமையால் மைலாப்பூரில் திருவள்ளுவர் கோயில் அமைக்கப்பட்டதோ என்பன விளங்கவில்லை. திருவள்ளுவர் பிறந்தவிடம் மைலாப்பூர் என்பதினால் மைலாப்பூரில் கோயில் அமைக்கப்பட்டதெனக் கொள்ளினும் மலைவாகும். சமய குரவர் போன்ற அடியார் கோயில்கள் அவர் பிறவாத இடங்களிலுமிருக்கக் காண்கின்றோமன்றோ.

---

1. உப்பக்க நோக்கி யுபகேசி தோண்மணந்தான்
உத்தர மாமதுரைக்(கு) அச்சென்ப— விப்பக்க
மாதானு பங்கிமறுவில் புலச்செந்நாப்
போதார் புனற்கூடற்(கு) அச்சு.

## திருக்குறள்

"ஓதற் கெளிதா யுணர்தற் கரிதாகி
வேதப் பொருளாய் மிகவிளங்கித்—தீதற்றோ
ருள்ளுதோ றுள்ளுதோ றுள்ளமுருக்குமே
வள்ளுவர் வாய் மொழி"

குறள் தமிழ் மொழியில் எழுதப்பட்ட நீதி நூல்களுள் ஒன்று. இது தமிழ் மக்களால் மிகவும் மதித்துப் போற்றப்பட்டு வருகின்றது. இதற்குப் பன்னிரண்டுக்கு மேற்பட்ட உரைகள் உண்டு. பரிமேலழகர் என்னும் அந்தணரால் எழுதப்பட்ட உரை சிறந்ததாகக் கொள்ளப்பட்டு வருகின்றது. திருக்குறளில் சொற்சிறப்பும் பொருளாழமும், நீதியின் அமைவும் உள்ளன. குறள் உலகம் முற்றும் அறிந்த நூலாகவிருந்தபோதும் அது கற்கவேண்டிய அளவுக்குத் தமிழ் மக்களாற் கற்கப்படுவதில்லை. அன்னிய நாட்டவர் பலர் திருக்குறளைக் கற்பதில் தமது உழைப்பையும், காலத்தையும், அறிவையும் செலவிட்டுள்ளார்கள். ஆரியல் (M-Ariel) என்னும் பிரான்சியரும், இத்தாலியருள் பெஸ்கி (வீரமாமுனிவர்) என்னும் கிறித்துவப் பாதிரியும், சேர்மனியருள் குரோல் (Dr. Graul), என்பாரும், ஆங்கிலருள் எலிஸ் (Ellis), துரு (Drew), உரோபின்சன், போப்பு முதலியோரும் குறள் முழுவதையும்

1. இது டாக்டர் ஜே. லைசரஸ் (Rev. Dr. J. Lazarus) என்பார் ஆங்கிலத்தில் வரைந்த கட்டுரை ஒன்றின் சுருங்கிய கருத்து.

அல்லது அதன் பகுதியை மொழிபெயர்த்து அச்சிற் பதிப்பித்தார்கள். இதனுல் ஐரோப்பாவில் கல்வி அறிவுள்ள மக்கள் திருக்குறளின் பெருமையைப்பற்றி அறிந்தார்கள். திராவிட மொழிகளின் ஒப்பியல் இலக்கணம் எழுதிய கால்ட்டுவேல் திருக்குறள் தமிழிலுள்ள மிகப்பழைய நூல் எனக் குறிப்பிட்டுள்ளார். பேராசிரியர் சுந்தரம் பிள்ளை, கனகசபைப் பிள்ளை, கிருஷ்ணசாமி ஐயங்கார் முதலியோர் தமிழ் மிகச் செழிப்புற்றிருந்த கி. பி. முதலாம் நூற்ருண்டு அல்லது இரண்டாம் நூற்ருண்டில் திருவள்ளுவர் விளங்கியவர் எனக் காட்டியுள்ளார்கள். கி. பி. இரண்டாம் நூற்ருண்டில் செய்யப்பட்டவை எனக் காலம் அறியப்பட்டுள்ள இலக்கியங்களில் திருக்குறள் அடிகள் எடுத்து ஆளப்பட்டுள்ளன.

குறள் செய்த ஆசிரியரைப்பற்றி அதிகம் அறியப்படவில்லை. மிகமிகப் பழங்காலந்தொட்டு அவர் திருவள்ளுவரெனவே வழங்கப்பட்டுள்ளார். வள்ளுவர் என்னும் பெயர் இக்காலத்தில் புலைக்குலத்தினர் பதினெண்மரில் தலைமையுடையராகிய ஒரு கூட்டத்தினரைக் குறிக்கின்றது.................. பிற்காலச் செவிவழக்குக் கதைகள் திருவள்ளுவர் பிராமணத் தந்தைக்கும் புலைக்குலத் தாய்க்கும் பிறந்தவரெனக் கூறுகின்றன. குறளில் ஆதிபகவன் என்னுஞ் சொல் கடவுளைக் குறிக்க வழங்கப்பட்டுள்ளது. இப்பெயரை எடுத்துக்கொண்டு திருவள்ளுவரின் தாய் ஆதி என்றும், தந்தை பகவன் என்றும்

கட்டப்பட்ட கதை மிக மூடத்தனமுடையதாகும். இப்புலவர் மைலாப்பூரைத் தனது வாழ் இடமாகக் கொண்டு நெசவு தொழில் புரிந்து வாழ்ந்தார் என்று சொல்லப்படுகின்றது. வள்ளுவர் நெசவு தொழிலைக் கைக்கொண்டது வியப்புககிடமானதே. இதனினும் வியப்பளிப்பது அவர் காவிரிப்பாக் கத்தில் வேளாளப் பெண்ணை மணந்தது. இவர் மரக்கலம் வைத்துப் பிறநாடுகளோடு வாணிகம் புரிந்த ஏலேலசிங்கனின் நட்பைப் பெற்றிருந்தா ரென்றும் சொல்லப்படுகின்றது. இவர் மைலாப் பூரில் வாழ்கின்ற காலங்களில் தான் இயற்றிய திருக்குறளுக்கு வேண்டிய அறிவைப் பெற்றிருத் தல்வேண்டும். இவர் பாண்டியன் உக்கிரப் பெரு வழுதியின் காலத்தவரான, பிரிட்டனை வெற்றி கொண்ட முதலாம் குளோடியஸ் ஆகிய உரோமா புரிச் சக்கரவர்த்தியின் காலத்தவராகலாம். தமது நூலுக்கு ஆதாரங்களை இவர் எங்கிருந்து பெற்றார்? இக்கேள்வி மிக முக்கிய முடையதும் அதிகம் இன் பம் அளியாததுமாகும். சங்ககால நூல்களி லிருந்தே அவர் தனது நூலுக்கு ஆதாரங்களைப் பெற்றார் என்று கூறுவது அறிவுக்கு ஏற்றதே யாகும். அரசர், அவர்களின் கல்வி, போர், வீரர்களின் தீரம் போன்றவைகளைப் பற்றிய நினைவுகள் புலவரின் உள்ளத்தில் தோன்றின. கட்குடியன், சூதாடுவோன், சோம்பித் திரிவோன், பயிரிடுவோன், பெற்றோர் குழந்தைகள் போன் றவர்களின் செயல்களையும் பிற உயிருள்ள

உயிரில்லாப் பொருள்களின் இயல்புகளையும் அவர் கூர்ந்து கவனித்திருந்தார்.

அறிவுத்தாகங் கொண்டிருந்த திருவள்ளுவர் பொய்யை விலக்கி மெய்யை அறிவதற்கு மதுரைச் சங்கத்துக்குப் போயிருத்தல்கூடும். டாக்டர் போப் கிறித்துமதக் கருத்துக்களைக் கைக்கொண்டே வள்ளுவர் திருக்குறளைச் செய்தார் எனக் கூறியுள்ளார். கிறித்துவும் அப்போஸ்தலரும் கூறிய நீதிகள் திருக்குறளிற் காணப்படவில்லை. திருக்குறள் கடவுள் வாழ்த்துக்கும் கிறித்துவர்களின் பத்துக் கட்டளைகளுக்கும் சம்பந்தமில்லை. திருக்குறளில் கூறப்படும் கொல்லாமைக்கும் கிறித்துவ மறையில் கூறப்படும் கொல்லாமைக்கும் வேறுபாடு உண்டு. அங்குமிங்கும் சில ஒற்றுமைகள் காணப்படலாம். அவ்வாறு காணப்படுதல் இயல்பே. மனித இயற்கை எல்லா இடங்களிலும் ஒருவகையினதே. ஒரேவகையான உயிர்களின் ஒரேவகை இயற்கை உணர்வைக் கடல்கள் தானும் பிரிக்கமுடியாது.

திருக்குறளைச் செய்தபின் அதனை அரங்கேற்றுவதற்கு திருவள்ளுவர் மதுரைக்குச் சென்றார் என்று சொல்லப்படுகின்றது. தொடக்கத்தில் சங்கப் புலவர்கள் அதனை ஆராய மறுத்தார்கள். பின்பு வள்ளுவர் அதனைச் சங்கப் பலகையில் வைக்கும்படி வேண்டினார். அவர் வேண்டுகோள் இடம்பெற்றது. ஆனால், பலகை குறள் ஒன்று மாத்திரம் இருக்க இடங்கொடுத்துப் புலவர்களைத் தாமரை வாவியில் தள்ளிற்று. இக்கதையின் உட்

பொருள் யாதெனில், சங்கப் புலவர்கள் தொடக்கத்தில் குறளின் பெருமையை ஏற்க மறுத்த போதும் அதன் பெருமை இறுதியில் அவர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டதென்பதே.

திருவள்ளுவர் மறைந்து விட்டாலும் அவர் புகழ் மறையவில்லை. உலகில் மக்கள் உண்மையையும் நன்மையையும் மதிக்கும் காலம் வரையில் திருக்குறள் வாக்கியங்கள் அவர்களுக்கு அறிவு கொளுத்திக்கொண்டே இருக்கும்.

திருவள்ளுவருடைய பெயர் அறியப்படாதிருப்பதுபோலவே அவர் நூலின் பெயரும் அறியப்படவில்லை. அது, அந்நூல் யாக்கப்பட்ட பாடல் வகையினல் குறளென்று அறியப்பட்டு வருகின்றது.

இக்கால விஞ்ஞானிகள் வாழ்க்கை என்பது மரணத்துக்கு மாருன போராட்டம் என்று கூறுவதுபோலத் திருவள்ளுவர் அது ஏழு பிறப்புக்களுக்கும் மாருன போராட்டம் எனக்கூறியுள்ளார்.

திருவள்ளுவர் கொலையையும், ஊன் புசித்தலையும் கடிந்து கூறுவதால் அவர் தமது சமயத்தைச் சேர்ந்தவர் எனச் சைனர் கூறுகின்றனர். இது அவர் கூறுவதற்கு தக்க நியாயமாகமாட்டாது. இன்றுபோலவே முற்காலத்தில் மக்களிற் பெரும்பாலார் தாவர உணவு கொள்வோராயிருந்தனர். குறளாசிரியர் சமயக்கொள்கை சம்பந்தப்படாமல் கொல்வதையும், ஊன் புசிப்பதைப் பற்றியுள்ள பொல்லாமையைத் தமது மனத்தில் தோன்றியவாறு பொது நோக்காகவே கூறுகின்ருர். இந்-

திரன், திருமால் கதைகளை நம்பாதவைனருக்குத் திருக்குறளில் வரும் அவர் கதை சம்பந்தமான குறிப்புக்கள் ஏற்றனவாகா. திருவள்ளுவர் நல்லொழுக்கத்துக்கும் ஞாயத்துக்கும் மாறுபட்டவற்றை ஏற்றுக்கொள்ளாத தத்துவ சாத்திரியாகக் காணப்படுகின்றார். அவர் மறுபிறப்பு விதி என்பவைகளையும் குறிப்பிடுகின்றார்.

திருக்குறள் தூய தமிழில் செய்யப்பட்டுள்ளது. அதில் மூன்பின் 12,000 சொற்கள் வரையில் உண்டு. அவைகளில் சமக்கிருதச் சொற்கள் ஐம்பதுக்குமேல் இல்லை. ஐரோப்பிய பண்டிதர்கள் குறளைப்பற்றி கூறியுள்ள, புகழ் உரைகள் ஈண்டு கவனிக்கத்தக்கன. "டாக்டர் பாத் (Dr. Bath) தனது இந்திய சமயங்கள்"[1] என்னும் நூலில் கூறியிருப்பது வருமாறு:

"தமிழிலே காணப்படும் மிகப் புகழ்ச்சிக்குரிய திருக்குறளில் மிக தூயவும் உயர்ந்தவும் சமயக் கருத்துக்கள் நிரம்பியுள்ளன."

ஆரியல் என்னும் பிரான்சிய திருக்குறள் மொழிபெயர்ப்பாளர் கூறியிருப்பது வருமாறு:

"திருக்குறள் தமிழ் மொழியிலுள்ள நூல்களில் தலைமையுடையது. அதன் ஆசிரியர் தனது சாதி சமயம் என்பவைகளை காட்டிக்கொள்ளாது எல்லாச் சாதியினருக்கும் எல்லாச் சமயத்தினருக்கும் எல்லா மக்கட் சமூகத்தினருக்கும் ஏற்றுக்கொள்

1. Religions of India

னும் பொதுவாகிய முறையில் நூல் செய்திருப்பதே மிக வியப்பளிப்பது. அவர் உயர்ந்த ஒழுக்கத்தையும் நியாயத்தையும் கடைப்பிடிக்கின்றார்; குடும்ப வாழ்க்கைக்கு இன்றியமையாத உண்மை, அறம் என்னும் உயர்ந்த ஒழுக்க விதிகளைக் கூறுகின்றார். அவர், எண்ணங்களால் நிறைந்திருத்தல் போலவே மொழிப் புலமையிலும் நிரம்பியவராவர்.''

திருவள்ளுவர் வேதங்களையோ மனு நூலையோ தழுவி யாதும் கூறவில்லை. மனச்சான்றுக்கு ஏற்றவைகளையே நேரில் கூறியுள்ளார். இவ்வகையான ஒப்புயர்வில்லாத ஒரு நூலை இரண்டாயிரம் ஆண்டுகளின் முன் தோற்றுவித்த ஒரு சாதியார் கீழ் நிலையில் இருந்தார்கள் எனக்கூறுதல் அமையாது. வள்ளுவர் வெளியிட்ட நீதிகள் நீதியுள்ள நாட்டிலன்றிப் பரவமுடியாது. தமிழ் மக்களின் உயர்வுக்காக முயற்சிப்பவர்களுக்குக் குறள் மிகவும் வேண்டப்படுவதாகும். திருவள்ளுவர் வாழ்ந்த தமிழ்நாட்டு மக்களிடத்துத் தம் கருத்துக்களைப் புகுத்த விரும்புவோர் திருக்குறளை நன்கு பயின்றிருக்க வேண்டுவது அவசியம்.

''இலக்கணமாவது தொல்காப்பிய மொன்றுமே;
செய்யுளாவது திருவள்ளுவர் ஒன்றுமே,''

—இலக்கணக் கொத்து.

## திருவள்ளுவ மாலை

திருக்குறளைச் சிறப்பித்துப் பாடப்பட்ட ஐம்பத்து மூன்று பாடல்கள் திருவள்ளுவ மாலை

என்னும் பெயருடன் வழங்கி வருகின்றன. இப் பாடல்கள் ஒவ்வொன்றும் சங்கப் புலவர் ஒவ்வொருவரால் செய்யப்பட்ட தென்னும் கதை வழங்குகின்றது. உண்மையில் இப்பாடல்கள் கி. பி. ஒன்பதாம் நூற்றாண்டிலோ அதற்குப் பின்போ யாரோ ஊர் பெயர் அறியப்படாத ஒருவரால் செய்யப்பட்டதென ஆராய்ச்சியாளர் கருதுகின்றனர்.

"திருவள்ளுவமாலை செய்தது குறள் அரங்கேற்றிய காலத்தென்றாவது, அதில் நாமகள் இறையனார் முதலியவர்கள் பாடியனவாகக் காணப்படும் செய்யுள்கள், மெய்ம்மையாக அவர்களாற் பாடப்பட்டன வென்றாவது கொள்ளற்கிடமின்மையால், மேற் கூறிய மாமூலர் பாட்டென்பது வள்ளுவரை இழிகுலத்தாரென்பதற்குத் தக்க ஆதாரமாகாது. திருவள்ளுவமாலை செய்தது குறள் அரங்கேற்றிய காலத்தன்று என்பதற்குக் காரணம் யாது என்பீராயின், அசரீரியும் நாமகளும் பாட்டுப் பாடுவது அனுபவ விரோதமும் அசம்பாவிதமு மாதலுமேயாம். மற்றையோர்களாற் பாடப்பட்டனவாகக் காணப்படும் பாட்டுகளுட் பெரும்பாலன மெய்யாக அவர்களாற் பாடப்பட்டனவல்ல. எங்ஙன மெனின், ஒரு நூலுக்குப் பாயிரஞ் சொல்லவோ அன்றிஅதனை எடுத்துப் புகழவோ புக்கார் அந்நூல் முழுவதையும் பற்றிப் பேசுவரேயன்றி அதன் ஒரு பாகத்தை மாத்திரம் பேசார். திருவள்ளுவமாலையிலோ அறத்துப்பாலைப்பற்றி,

"பாயிர நான்கில்லற மிருபான் பன்மூன்றே
தூய துறவறமொன் றாழாக—ஆய
அறத்துப்பால் நால்வகை யாராய்ந் துரைத்தார் நாலின்
திறத்துப்பால் வள்ளுவனார் தேர்ந்து."

என்று எறிச்சலூர் மலாடனாரும், பொருட்பாலைப் பற்றி,

அரசிய லையைந் தமைச்சிய லீரைந்
துருவல் லரணிரண் டொன் றொண்கூழ்—இருவியல்
திண்படை நட்புப்பதினேழ் குடிபதின்மூன்
றெண்பொரு ளேழா மிவை"

என்று போக்கியாரும், காமத்துப்பாலைப்பற்றி,

ஆண்பாலே ழாறிரண்டு பெண்பா லடுத்தன்பு
பூண்பா லிருபாலோ ராறாக—மாண்பாய
காமத்தின் பக்கமொரு மூன்றாகக் கட்டுரைத்தார்
நாமத்தின் வள்ளுவனார் நன்கு"

என்று மோசிகீரனாரும் கூறியவாக வருகின்றன. இம்மூன்று பாடல்களும் குறளிலுள்ள ஒவ்வோரியலின் தொகையையும் அதிகாரத்தின் தொகையையும் கூறுகின்றனவன்றிக் குறளின் சிறப்பை அல்லது அதன் அருமை பெருமைகளை எடுத்துரைக்கவில்லை; அன்றிச் செய்யுளழகு வாய்ந்தனவாயுமில்லை. இவைகளை இயற்றுவதற்கு மூன்று சங்கப் புலவர்கள் வேண்டியதில்லை; காரிகை கற்றுக் கவிபாடும் ஒருவர் போதும். இங்ஙனமே இவை மூன்றும் குறளின் இயலும் அதிகாரமும் இத்தனையென்று கணக்கிட விரும்பிய ஒருவராலேயே இயற்றப்பட்டனவாதல் வேண்டும்.

"திருவள்ளுவ மாலை குறள் அரங்கேற்றப்பட்ட காலத்துச் செய்யப்படவில்லை என்பதற்கு மற்றொரு நியாயமும் கூறுதும். அம்மாலையில் உக்கிரப் பெருவழுதியார் பாடினதாக வரும் செய்யுளில், 'நான்மறையின் மெய்ப்பொருளை முப்பொருளா நான்முகத்தோன் தான் மறைத்து வள்ளுவனாய்த் தந்துரைத்த நூல்' என்றும், 'காவிரிப்பூம் பட்டினத்துக் காரிக்கண்ணனார் பெயர் கொண்ட செய்யுளில் ஐயாறு நூறு மதிகார மூன்றுமா; மெய்யாய வேதப்பொருள் விளங்கப்-பொய்யாது, தந்தா னுலகுக்குத்தான் வள்ளுவனாகி, அந்தாமரைமே லயன்' என்றும் வள்ளுவரைப் பிரமதேவரின் அவதாரமாகக் கூறவந்தது அவர் உயிரோடிருந்த போதன்று. உயிரோடிருக்கும் போதே ஒருவரைக் கடவுளின் அவதாரமாகக் கொண்டாடுவது எங்கும் இல்லை. ஒருவர் இறந்த பின் பல வருடங்கள் சென்று காலம் நீடிக்க நீடிக்கத்தான் அவருடைய பெருமை வளர்ச்சியுற்றுத் தெய்வத்தன்மை யடையும். அப்போதுதான் அவர் கடவுளின் அவதாரமாகக் கருதப்படுவார். அங்ஙனமே வள்ளுவரின் அறிவின் பெருமையைக் கண்டு அவரை ஒரு கடவுளின் அவதாரமாகக் கொண்டாட வந்தது அவர் குறளியற்றிப் பல வருடங்கள் சென்ற பின்பேயாம். அப்படிச் சிறிது காலஞ்சென்று அவர் வள்ளுவர் பிரமதேவனுடைய அவதாரமென்ற கொள்கை வேரூன்றியதன் பின்னரே இந்தப் பாட்டுக்கள் பாடப்பட்டிருத்தல்

வேண்டும். இங்ஙனம் இப்பாடல்கள் பாடப்பட்டது குறள் இயற்றிய வெகுகாலத்துக்குப் பின்பானால், அவற்றை அடக்கியுள்ள திருவள்ளுவமாலை குறளியற்றப்பட்ட காலத்து இயற்றப்பட்டதாகாது.

"இனி இறையனார் களவியலுரையில் கடைச் சங்கப் புலவர் எண்மர் பெயர்கள் கூறப்பட்டிருக்கின்றன. இவ்வெண்மருள் திருவள்ளுவ மாலையில் மூவர் பெயர் மாத்திரம் காணப்படுகின்றன; ஐவர் பெயரில்லை. அன்றியும் சிலப்பதிகாரத்தில் மகாமகோபாத்தியாயர் சாமிநாத ஐயரவர்களால் எடுத்துக் காட்டப்பட்ட பழைய அகவலொன்று கடைச் சங்கப் புலவரில் இருபத்தெழுவர் பெயர் கூறுகின்றது. அவற்றில் பதினேழு பெயர்கள் திருவள்ளுவ மாலையில் இல்லை. இதனால் திருவள்ளுவ மாலை பாடினோர் கடைச்சங்கப் புலவர்கள் என்று சொல்வதற்கிட மின்றாகின்றது.

மேற்கூறியவற்றால் திருவள்ளுவமாலை கடைச் சங்க காலத்து நூலன்றென்பதும் அதிலுள்ள பாட்டொன்றேனும் அங்கே கூறப்பட்ட புலவராலேயே இயற்றப்பட்டதென்பதற்குத் தக்க ஆதாரம் இல்லை என்பதும் நன்குபோதரும். ஆயின் திருவள்ளுவமாலை எக்காலத்து யாரால் இயற்றப்பட்டதெனின், காலந்தோறும் திருக்குறளைப்பற்றிப் பாட்டுக்கள் புலவர் பலராலியற்றப்பட்டனவாக, பிற்காலத்து வந்த புலவரொருவர் அவற்றையெல்லாம் அன்றேல், அவற்றுட் சிலவற்றை மாத்திரம் ஒருங்கு சேர்த்து ஒழுங்குபடுத்தி ஒரு நூலாக்கி

யிருத்தல்வேண்டும். அவர் தாமும் சில பாட்டுக்கள் பாடிச் சேர்த்திருக்கலாம். அல்லது நூல் முழுவதையும் புலவர் ஒருவரே செய்து மிருக்கலாம். வள்ளுவ மாலையில் வரும் பாட்டுக்கள் ஏறக்குறைய ஒரே விதமான நேரிசை வெண்பாக்களாக விருத்தலாலும் அசரீரி சொன்னதாக வரும்பாட்டு அசரீரியே நேரே சொன்னதாயில்லாமல்,

திருத்தகு தெய்வத் திருவள் ளுவரோ
டுருத்தகு நற்பலகை யொக்க—விருக்க
வுருத்திர சன்ம ரெனவுரைத்து வானி
லொருக்கவோ வென்றதோர் சொல்.

என அசரீரி சொன்னதாக மற்றொருவரால் பாடப்பட்டிருத்தலும் இந்தக் கொள்கைக்குத் தகுந்த துணையாகும்.

"இன்னும் இந்தப் பாட்டு மதுரையில் தெய்வத்தன்மை பொருந்திய சங்கப்பலகை ஒன்றிருந்த தென்பதைக் குறித்தலினாலும், அந்தப் பலகையில் திருவள்ளுவரோடொக்க விருத்தற்கு உருத்திரசன்மரே ஏற்றவரென்பதனால் குறளரங்கேற்றிய காலத்தில் சங்கப்புலவர் நாற்பத்தெண்மரும் திருவள்ளுவரோடொக்க விருக்கத் தகுதியற்றவராய்ப் பொற்றாமரை வாவியுள் வீழ்ந்து மூழ்கினரென்னுங் கருத்தைத் தோற்று மிடமாயிருத்தலினாலும் இது குறள் தோன்றி வெகு காலத்துக்குப்பின் இயற்றப்பட்டிருக்க வேண்டுமென்பது தேற்றம். சங்கப் பலகையிலேற்றிய இக்கதை கட்டுக்கதை.

இதுபோன்றதொரு கதை சடகோபரியற்றிய திருவாய் மொழியைப்பற்றியும் வழங்குகின்றது"[1]

திருவள்ளுவ மாலையைக் குறித்துத் தமிழ் ஆராய்ச்சி என்னும் நூலில் எம். ஸ்ரீனிவாச ஐயங்கார் எம். ஏ. அவர்கள் கூறியிருப்பது பின்வருமாறு:

"திருவள்ளுவரைச் சிறப்பித்துக் கூறும் திருவள்ளுவமாலைப் பாடல்கள் கற்பனைக் கதைகள் மலிந்தனவாகக் காணப்படுகின்றன. இப்பாடல்கள் கி. பி. 9-ம் நூற்றாண்டில் விளங்கிய புலவர் ஒருவரால் வள்ளுவரின் புகழைப் பரப்பும் நோக்கமாக செய்யப்பட்டன வாகலாம்"

தமிழ்ப்புலவர் சோமசுந்தர பாரதியாரவர்களும் வள்ளுவமாலை பிற்காலத்து எவராலோ ஆக்கப்பட்ட தென்பதை நன்கு விளக்கி அண்ணமலைப் பல்கலைக் கழக வெளியீடு ஒன்றில் தீட்டியுள்ளார். இன்றைய ஆராய்ச்சி அறிஞர்களின் முடிவு திருவள்ளுவமாலை பிற்காலத்துப் பாடல்கள் என்பதும் அவை சங்ககாலப் புலவர்களால் பாடப்படாதன வென்பதுமேயாகும்.

கி. பி. 10-ம் நூற்றாண்டில் விளங்கிய கல்லாடர். "வள்ளுவன் றனக்கு வளர்கவிப் புலவர்முன் முதற்-கவி பாடிய முக்கப்பெருமான்" எனக் கல்லாடத்துட் கூறியிருத்தல் கொண்டு திருவள்ளுவமாலைப் பாடல்கள் முழுமையுமோ, பகுதியோ அவர் காலத்து இருந்தன வென்பதை நாம்

1. திருகோணமலை, த. கனக சுந்தரம்பிள்ளை பி. ஏ.

உய்த்தறிதல் கூடும். திருவள்ளுவமாலைப் பாடல்களைப் பழைய உரையாசிரியர்கள் எவரேனும் எடுத்தாளாமை கருத்திற் பதிக்கத்தக்கது. பழைய உரையாசிரியர்கள் கி. பி. 12-ம் நூற்றாண்டு முதல் கி. பி. 14-ஆம் நூற்றாண்டு வரை விளங்கியவராவர்.

கி. பி. 13-ம் நூற்றாண்டில் விளங்கிய உமாபதி சிவாசாரியர் தாமியற்றிய நெஞ்சுவிடு தூதில்,

"...........,,...........முன்னந்
தலைப்பட்டார் தீரத் துறந்தார் மயங்கி
வலைப்பட்டார் மற்றையவ ரென்று—நிலைத்ததமிழின்
றெய்வப் புலமைத் திருவள்ளுவ ருரைத்த
மெய் வைத்த சொல்லை"

எனக் கூறுமாற்றால் திருக்குறள் தமிழ்ப் புலவர்களால் பொன்னே எனப்போற்றிப் பயிலப்பட்டு வந்ததெனா நன்கு விளங்குகின்றது.

## பரிமேலழகர்

திருக்குறளுக்குப் பழைய உரையாசிரியர் பதின்மர் உரை செய்திருக்கின்றனர். அவர்கள் தாமர், மணக்குடவர், தாமத்தர், நச்சர், பரிதி, பரிமேலழகர், திருமலையர், மல்லர், கவிப்பெருமாள், காளிங்கர் என்போர் ஆவர்[1]. இவ்வுரைகளில்

1. தருமர் மணக்குடவர் தாமத்தர் நச்சர்
பரிதி பரிமே லழகர் திருமலையர்
மல்லர் கவிப்பெருமாள் காளிங்கர் வள்ளுவநூற்
கெல்லையுரை செய்தா ரிவர். —பழையபாடல்

பிற உரையாசிரியர்கள்: வடிவேலுச் செட்டியார், அருணாசலக் கவிராயர், சரவணப் பெருமாள் ஐயர்.

இன்று வெளிவந்தவை மணக்குடவருரையும் பரிமேலழகர் உரையுமேயாகும். பரிமேலழகர் உரை மிகச் சிறப்புடையதாக யாவராலும் கொண்டாடப்படுகின்றது. பரிமேலழகர் திருக்குறளுக்கு விரித்த உரை குறித்து வழங்கும் பழைய செய்யுட்கள் சில அவர் திறமையைப் புலப்படுத்துவன.

" திருத்தகுசீர்த் தெய்வத் திருவள்ளுவர் தங்
கருத்தமைதி தானே கருதி—விரித்துரைத்தான்
பன்னு தமிழ்சேர் பரிமே லழகனெனும்
மன்னு முயர்நாமன் வந்து "

" பாலெல்லாம் நல்லாவின் பாலாமோ பாரிலுள்ள
நூலெல்லாம் வள்ளுவர்செய் நூலாமோ—நூலிற்
பரித்தவுரை யெல்லாம் பரிமே லழகன்
தெரித்தவுரை யாமோ தெளி "

" தெய்வப் புலமைத் திருவள்ளுவர்குறளில்
உய்விக்கு நூலெல்லா முள்ளதெனச்—செய்வித்தான்
தத்துவமெல் லாமுடம்பிற் றுந்துணர்வார் போலுலக
மொத்தபரி மேலழக னோர்ந்து "

" திருந்திய தமிழிற் றெய்வப் புலமை
அருந்திறல் வள்ளுவ னுய்ந்துதன் வாக்கால்
அறம்பொரு ளின்பம் வீடென நான்கின்
திறந்தெரிந் துரைத்த செவ்வி முப்பாலுக்கு
ஒருரை யன்றி யொன்பது சென்றும்
ஐயுற வாகக் கையுறு காலை
வள்ளுவன் மீளவும் வந்துதித் துலகோர்க்கு
உள்ளிய பொருளை யுரைத்தன னென்ன
...........................................................

உய்த்துணர் வுடைய வோர் உண்மையாளன்
பரிமே லழக னெனப் பெயர் படைத்துத்
தரைமே லுதித்த தலைமை யோனே ''

பரிமேலழகரைப்பற்றிய வரலாறு யாதும் நன்ருகப் புலப்படவில்லை. வள்ளுவர் வரலாற்றை ஒப்பவே இவருடைய வரலாறும் கற்பனைக் கதைகள் பலவற்ரோடு கலந்து சிறிதளவில் அறியக் கிடக்கின்றது. தமிழர் புராதன கலைஞனின் பதிப்பாசிரியரா யிருந்தவரும் வரலாற்று ஆராய்ச்சித் துறையிற் கைவந்த வராய் விளங்கிய வருமாகிய பண்டிதர் கவிராயனவர்கள் பரிமேலழகர் வரலாறு சம்பந்தமாகக் கூறியுள்ள குறிப்பு வருமாறு:

"இன்று பரிமேலழகர் பிராமணக் குலத்தவராகவும் காஞ்சீபுரத்தில் வாழ்ந்தவராகவும் கருதப் படுகின்ருர். இதற்கு ஆதாரம் "திருக்காஞ்சிவாழ் பரிமேலழகன்-வள்ளுவர்க்கு வழி காட்டினன் தொண்டை மண்டலமே'' என வரும் தொண்டை மண்டல சதகமாகும். தொண்டை மண்டல சதகம் சரித்திர சம்பந்தமான ஆதாரமாகக் கொள்ளத் தக்க நூலன்று. கன்ன பரம்பரை வரலாற்றின் படி இவர் கடையம் என்னும் இடத்தில் பிறந்து புங்கவர்நத்தத்தில் வாழ்ந்தவர். இவ்விரண்டு கிராமங்களும் திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ளன. வெளிகண்ட நாடார் என்னும் செல்வன் ஒருவன் இவரை ஆதரித்தான். பரிமேலழகரும் அவரை ஆதரித்தவனின் குலத்தவரே. இவர் நாடார் குழுவுக்குக் குருக்களாயுள்ள கூட்டத்தைச் சேர்ந்

தவர். இவர் வாழ்ந்த வீடு இன்று அக்கிராமத்தின் வடமேற்கு மூலையில் உள்ளது. மாணிக்கவாசகர் பொருட்டுச் சிவன் குதிரை மேல் வந்தார் என்னும் புராண ஐதீகம்பற்றிச் சிவனுக்கு வழங்கும் பெயர் இவருக்கு இடப்பட்டது. பரிமேலழகரின் சமயம் சைவம். இவர் கி. பி. 15-ம் நூற்றாண்டில் வாழ்ந்தார். இவர் நச்சினார்க்கினியர் காலத்துக்குப்பின் தோன்றியவரெனக் கருதவேண்டி யிருக்கின்றது.

"பரிமேலழகருக்குக் குமார சுவாமிக் குருக்கள் என்னும் குமாரன் ஒருவர் இருந்தார். இவர் ஆதி இராமாயணம் என்னும் நூலைப் பாடினார். அந்நூல் ஏட்டுச்சுவடி வடிவில் இன்றும் வெளிகண்ட நாடானின் சந்ததியாரால் பாதுகாத்து வைக்கப் பட்டுள்ளது. இக்குறிப்பை எழுதிய ஆசிரியர், மிக வயது முதிர்ந்தவரும், பரிமேலழகரின் சந்ததியி லுள்ளவரெனப் படுபவருமாகிய ஒரு கிழவியிடம் பல செய்திகளைக் கேட்டு அறிந்துள்ளார்.

அவள் பதினைந்து ஆண்டுகளின்முன் எட்டியாபுரத்துக்கும் புங்கவர்நத்தத்துக்கும் அண்மையி லுள்ள இரால் என்னும் கிராமத்தில் வாழ்ந்தாள். அவளுக்கு அப்பொழுது 90 வயது; அவளுக்குக் கண் பார்வை மறைந்து விட்டாலும் அவள் மறதி இல்லாதவளாயிருந்தாள். அவள் குருக்கள் குடும்பத்தைச் சேர்ந்தவளும் வயது முதிர்ந்தவளுமாயிருந்தமையால் மக்கள் அவளுக்கு அதிக மரியாதை காட்டி வந்தார்கள். அவளே பரிமேலழகர் கால் வழியில் கடைசியாக வாழ்ந்தவள். இக்குருக்கள்

குடும்பத்தினர் இரால், கடையம், பதுக்கப்பற்று முதலிய விடங்களிற் காணப்படுகின்றனர். இவர்களில் ஆண்கள் ஐயா அல்லது ஐயர் என அழைக்கப்படுவர். பரிமேலழகரைச் சார்ந்த கூட்டத்தினர் ஐயர் எனப்பட்டமையால் இவரைப் பிராமணராகப் பிற்காலத்தவர் கருதுவாராயினர்"[1]

இன்று பரிமேலழகரைப் பற்றி வழங்கும் கதை இவர் உலகளந்த பெருமாள் கோயில் அர்ச்சகராயிருந்த வைணவர் என்பதே. இவர் வெண்கலக் குதிரைமேல் இருந்து பாண்டிய அரசனுக்கு முன்னல் திருக்குறள் உரையை அரங்கேற்றினுரென்றும் அப்போது அக்குதிரை இயங்கிற்றென்றும் அதனல் அவருக்குப் பரிமேலழகர் என்னும் பெயருண்டான தென்றும் ஒரு கதை வழங்குகின்றது. இது நம்பத்தக்கதன்று. பரிமேலழகர் சங்க நூல்களுள் ஒன்ருகிய பரிபாடலுக்கு உரை செய்துள்ளார். திருமுருகாற்றுப்படை உரை ஒன்றும் இவர் பெயரால் வழங்குகின்றது.

## முப்பாலாக வள்ளுவர் நூல் செய்தற்குரிய காரணம்

திருக்குறள் அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நாற்பொருள்களைக் கூருது முப்பொருள்களையே கூறியுள்ளது. இதற்குக் காரணம் "வீடென்பது சிந்தையும் மொழியுஞ் செல்லா நிலைமைத்தாதலின் துறவறமாகிய காரண வகையாற்

1. Tamilian antiquary—VoL. II. No VI.

கூறப்படுவதல்லது இலக்கண வகையாற் கூறப் படாமையின் நூல்களாற் கூறப்படுவன ஏனை மூன்றுமேயாம்." எனப் பரிமேலழகர் கூறியுள் ளார். "அகத்தியனாரும் தொல்காப்பியனாரும் வீடு பேற்றிற்கு நிமித்தங் கூறுதலன்றி வீட்டின் தன்மை தமிழாற் கூறாரென்றுணர்க. இஃது, 'அந்நிலை மருங்கி னறமுதலாகிய—மும்முதற் பொருட்குமுரிய வெண்ப' என்பதனால் உணர்க. இக்கருத்தானே வள்ளுவநாயனாரும் முப்பாலாகக் கூறி மெய்யுணர்த்தலான் வீடுபேற்றிற்கு நிமித் தங் கூறினார்" என நச்சினார்க்கினியர் கூறியுள் ளார். குறள் முப்பாலாகச் செய்யப்படுவதற்கு நச்சினார்க்கினியர் கூறியுள்ள காரணமே ஏற்ற தாகும். பழந்தமிழர் சமய சம்பந்தமான உண்மை களை குருமாணாக்க முறையில்சொல்லி வந்தார்களே யன்றி அக்கருத்துக்களை நூலாகச் செய்யவில்லை. உபநிடதம் என்பதற்கு இரகசியம் அல்லது கிட்ட இருந்து கேட்கப்படுவது என்பது பொருள். வட மொழியில் சமய நூல்கள் எழுதப்படத் தொடங்கிய பிற்காலத்திலேயே தமிழரும் இரகசியமாக இருந்து வந்த தமது சமய உண்மைகளை நூல் வடிவிற் செய்யலாயினர். இன்றும் 'உபதேசம்' என வழங்கும் சமய சம்பிரதாயம் பழைய குருமாணாக்க முறையில் சமய உண்மைகளை அறிவதாகிய வழக்கின் நிழலேயாகும்.

பரிமேலழகர் ஒழுக்க மென்பதை வருணாச் சிரம தருமம் எனக் கூறியுள்ளார். திருக்குறள்,

அறத்தைப் பொது நோக்காகக் கூறிற்றே யன்றி மக்களின் ஏற்றத்தாழ்வுபற்றி அறங்களை மாறுபடுத்தவில்லை. இக்கருத்தினைப் பேராசிரியர் சுந்தரம்பிள்ளை அவர்கள்,

"வள்ளுவர் செய்திருக் குறளை வழுவற நன்குணர்ந்தோர்
உள்ளுவரோ மனுவாதி ஒருகுலத்துக் கொருநீதி"

எனநன்கு கூறி எடுத்து விளக்கியுள்ளார், காண்க.

## திருக்குறள் வடமொழி நூல்களைத் தழுவிச் செய்யப்பட்டதென்னும் மயக்கம்

சாணக்கியரின் அர்த்த சாத்திரம், காமந்தகம், பகவத்கீதை, மனுநூல், வாத்ஸ்யாயனம் முதலிய வடமொழி நூற்களின் கருத்துக்களோடு திருக்குற ளின்சிற்சில பகுதிகள் ஒத்திருத்தல் கொண்டு திரு வள்ளுவர் வடமொழி நூல்களைப் பின்பற்றியோ, தழுவியோ திருககுறளைச் செய்தாரென ஒரு சாரர் கூறுவர். அர்த்த சாத்திரம், காமந்தகம் முதலிய நூல்களைச் செய்த சாணக்கியர் காஞ்சி புரத்தினின்றும் சென்ற தமிழராவர். சாசனங் களில் இவர் **தமிழ சாணக்கிய** எனக்குறிக்கப்பட்டுள் ளார். இலங்கைப் புத்த நூலாகிய மாவம்சம் சாணக்கியரை மலையாளி எனக்கூறும். சாணக்கி யர் தமிழ் நாட்டில் அறிவுடை மககளிடையே வழங்கிய அரிய கருத்துக்களை வடமொழியில் நூலாகச்செய்து புகழ் அடைந்தார். சாணக்கியர் நூல் செய்வதற்கு ஆதாரமாகச் செவி வழக்கி லிருந்து கிடைத்தவை போன்றவைகளை எல்லாம்

திரட்டித் தமது கூரிய அறிவாற்றல் கொண்டு திருவள்ளுவரால் அமைக்கப்பட்டதே திருக்குறள். உண்மைகள் பெரும்பாலும் எல்லா மக்களுக்கும் பொதுவாகவே காணப்படும். கிறித்துவ பாதிரிமார் திருக்குறள் கிறித்துவமறைக் கருத்துக்களைப் பின் பற்றிச் செய்யப்பட்டது எனக் கூறினர். திரு வள்ளுவர் தாம் கூறும் உண்மைகளை வடமொழி நூல்களிலோ, கிறித்துவ நூல்களிலோ இருந்து எடுத்திருந்தால் அச்செயலை ஒருபோதும் கூறத் தவறி யிருக்கமாட்டார்; தவறின் அது அவர் ஒழுக்கத்துக்குத் தவறாகும்.

பரிமேலழகர் காலத்தில் ஸ்மிருதி வழக்குகளே உலகநீதிக் குரியனவென்றும், வடமொழியிலேயே எல்லா அறிவுக்குரிய நூல்களும் உள்ளன என்றும், அவைகளைப் பின்பற்றியே பிறநூல்கள் செய்யப் படுகின்றன, செய்யப்பட்டன வென்றும் கருத்துக் கள் பரவி யிருந்தமையாலும் அக்காலத்தில் வர லாற்று ஆராய்ச்சி உண்டாயிருக்கவில்லை யாதலா னும் உரையாசிரியர்கள் சிற்சில இடங்களில் பிழை பட்டதுமுண்டு. கோவிற் புராணங்கள் பாடு வார்தாமும் தாம் வடமொழியிலிருந்து மொழி பெயர்த்துத் தமது நூலைச் செய்வதாக கூறியிருத் தல் கவனித்தற்குரியது.

## ஞான வெட்டியான்

திருவள்ளுவரால் செய்யப்பட்ட இன்னொரு நூல் ஞானவெட்டியான் என்று சொல்லப்படு

கின்றது. ஞானவெட்டியான் என்னும் நூலின் நடை, பொருள் ஆகியவைகளைக் கொண்டு அது சமீபகாலத்தில் எவராலோ செய்யப்பட்டதென நன்கு விளங்கும்.

“ அகமகிழ மம்பிகைப் பெண்ண ருளினாலே
யவனிதனில் ஞானவெட்டி யருள யானும்
நிகழ்திரு வள்ளுவனய ஞருரைத்த வேத
நிரஞ்சனமா நிலவு பொழிரவி காப்பாமே”

எனவரும் ஞானவெட்டிக் காப்புச் செய்யுளினால் ஞானவெட்டியான் செய்தவர் திருவள்ளுவரல்லர் என்பது தெளிவாகின்றது. ஞானவெட்டியான் என்பதற்கு ஞானவழி என்று பொருள்.

## பாயிரம்

திருக்குறளில் கடவுள் வாழ்த்து, வான் சிறப்பு, நீத்தார் பெருமை, அறன் வலியுறுத்தல் என்னும் நான்கு அதிகாரங்களும் பாயிரம் என வழங்குகின்றன. சங்ககால நூல்களுக்குப் பாயிரம் செய்யும் வழக்குக் காணப்படவில்லை. பாயிரம் செய்வதற்கு விதி தொல்காப்பியத்திலும் காணப்படவில்லை. இறையனர் அகப்பொருள், தொல்காப்பியம் முதலிய நூல்களுக்கும் சங்கத்தொகை நூல்களுக்கும் பாயிரமில்லை. சங்கத்தொகை நூல்களுக்குப் பாயிரம் எனப்படும் கடவுள் வாழ்த்து கி. பி. 9-ம் நூற்றுண்டில் விளங்கிய பெருந்தேவனர் என்னும் புலவரால் பாடப்பட்டது. தொல்காப்பியச் சிறப்புப் பாயிரமென வழங்கும் “வட வேங்கடம் தென் குமரி-ஆயிடை” எனத் தொடங்கும் பாடல் பிற்

காலத் தேவராலோ செய்யப்பட்டதெனக் கொள்ளக் கிடக்கின்றது. நூல்களுக்குப் பாயிரம் இன்றியமையாதது என்னும் கருத்து முதன் முதல் இறையனார் களவியலுரையிற் காணப்படுகின்றது. இவ்வுரை கி. பி. ஏழு அல்லது எட்டாம் நூற்றாண்டளவில் எழுதப்பட்டது. சிலப்பதிகாரம், மணிமேகலை, சிந்தாமணி முதலிய நூல்களின் பாயிரம் நூலிற் கூறப்பட்ட பொருள்களை அல்லது பொருள் தலைப்புக்களையே சுருங்கக்கூறும் இக்கால நூல்களின் 'உள்ளுறை' போன்றது. வடமொழி இராமாயணத்தின் பாயிரமும் இம்முறையிலேயே அமைந்துள்ளது. தொல்காப்பியச் சிறப்புப் பாயிரத்துக்கும் மணிமேகலை, சிலப்பதிகாரப் பாயிரங்களுக்கும் வேறுபாடு உண்டு. சிலப்பதிகாரம் மணிமேகலை முதலிய நூல்களுக்குப் பின் தொல்காப்பியப் பாயிரம், தோன்றியதெனக் கருதவும் இடனுகின்றது. திருக்குறட் பாயிரம் எனப்படுவது, தொல்காப்பியம் மணிமேகலை, சிலப்பதிகாரப் பாயிரங்கள் போலல்லாது வேறு வகையில் அமைந்துள்ளது. வள்ளுவனாரே முதல் நாலு அதிகாரங்களுக்குப் பாயிரம் எனப் பெயரிட்டார் என்பது ஐயத்துக்கிடமானது. நூல்களுக்குப் பாயிரம் இன்றியமையாததென்னும் கருத்து வலி எய்திய காலத்தில், பிற்காலத்தாரெவரோ அவ்வதிகாரங்களுக்குப் பாயிரம் எனப் பெயரிட்டார் என்று தெரிகின்றது. வள்ளுவர் அற நூலாகிய குறளைப் பயில்வதால் எய்தும் பயன் "எண்குணத்தான்

தாளை வணங்கல்'' என்னும்கருத்தை முதற் குறளா. ட கூறிப் போந்தார் என நாம் கரு முதல் நான்கு அதிகாரத்தைக் குறித்துப் ப வாறு கருத்துக் கொண்டுள்ளார்கள். அவ வள்ளுவராற் செய்யப்பட்டனவல்ல எனக் ஒரு சாரருமுளர்.

* * *

ஆண்களோடு பெண்கள் சமமான ஆடவர் செய்யும் எல்லாத் தொழில் துறைக பெண்கள் கலந்துகொள்ள உரிமை உண்டு; மனைவியை விரும்பாத கணவனுக்கு அவளை விட்டு வேறு மணஞ் செய்துகொள்ளும் ( யிருப்பது போல அவளுக்கும் விரும்பாத கண நீக்கிவிட்டு வேறு கணவனை மணக்கும் உ யுண்டு என்பன போன்ற கருத்துக்கள் விக பரவி வரும் இக்காலத்தில்,

"தெய்வந் தொழாஅள் கொழுநற் றொழுதெ
பெய்யெனப் பெய்யு மழை"

என்னும் திருவள்ளுவர் குறள் எவ்வளவில் ஏ கொள்ளுமோ அறிகிலேம்.

" வாழிமறையா னினங்கள் வாழிமறையாக மங்
வாழிமனுநீதி மன்னர் மன்பதைகள் வாழியு
தெள்ளுகுறட் செந்தேன் செவிகுளிரப் பெய்,
வள்ளுவர் பாத மலர் ''

◆◆◆◆◆